# சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
# தெஹியோவிற்ற வலயம்

## தமிழ் மொழி– பாட இணைச் செயற்பாடு

## தரம் –1

C. ரூபி ஜஸிந்தா
(ஆசிரிய ஆலோசகர்)

### செயற்பாடு 01
### கட்டம் – 1
(மூத்தோரின் உதவியை பெற்றுக்கொள்ளவும்)

- நிலத்தில் ஏதாவது ஒரிடத்திலிருந்து மண் ஒரு வாளி எடுங்கள். (களி கலந்த மண்ணாயின் நல்லது.
- அந்த மண்ணை நீரில் கரையுங்கள்.
- சாக்கினால் அல்லது சிறிய துவாரமுடைய சல்லடையில் வடித்தெடுங்கள்.
- களி தட்டை பாத்திரத்தின் அடியில் உறைய விடுங்கள். (4/5 மணித்தியாலம்)
- பின் நீரை வடித்து களி மண்ணை சிறிது காயவிடுங்கள்.
- களி மண்ணை தேங்காய் எண்ணையில் கலந்து பிசையுங்கள்.
- களி மண் கையில் ஒட்டாத வரை பிசையுங்கள்.

### கட்டம் – 2

- சிறிய களி உருண்டைகள் செய்யுங்கள்.
- ஒவ்வொரு களி உருண்டைக்கும் நடுவில் ஈர்கிளிலால் குத்துங்கள்.



- சிறிது காய்ந்த பின் ஈர்க்கிளை கழட்டுங்கள்.
- களி உருண்டைகளை நன்றாக காய விடுங்கள். (முடிந்தால் வர்ணம் பூசலாம்.)
- ஒரு நூலினால் மாலையாக கோர்த்து எடுங்கள். (தேவையான உதவிகளை செய்யவும்.)
- பாடசாலையில் நடைபெறும் கைப்பணி கண்காட்சிக்கு எடுத்து செல்ல பத்திரப்படுத்துங்கள்.